Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 052 | வெள்ளிக்கிழமை Friday | 22.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# தமிழக அமைச்சர்களாக காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் இருவர் உள்பட 23 பேர் பதவியேற்பு



சென்னை: முதலமைச்சர் விஜய் தலைமையிலான தவெக அரசின் அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 23 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலில் 108 இடங்களில் வெற்றி பெற்ற தமிழக வெற்றிக் கழகம் காங்கிரஸ்,கம்யூனிஸ்ட் கட்சிகள், விசிக, ஐ.யு.எம்.எல் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ளது. மே 10 ஆம் தேதி விஜய் முதலமைச்சராக பொறுப்பேற்றநிலையில், அவரைத் தொடர்ந்து, தவெகவைச் சேர்ந்த 9 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர். அவர்களுக்கு மே 16ஆம் தேதி துறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

இந்நிலையில், தவெக அமைச்சரவையில் புதிதாக 23 பேர் பதவியேற்றுக் கொண்டனர். அவர்களுக்கு ஆளுநர் அர்லேகர் இன்று பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். அதில், காங்கிரஸை சேர்ந்த இருவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், புதிதாக பதவியேற்ற அமைச்சர்களுக்கு இலாகாகளை ஒதுக்கீடு செய்து, ஆளுநர் அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளார். தமிழகமுதல்வராக கடந்த மே.9-ம் தேதி விஜய் பதவியேற்றார். அன்றையதினம் அவருடன் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, அருண்ராஜ், செங்கோட்டையன், வெங்கடராமன், நிர்மல்குமார், ராஜ்மோகன், பிரபு, கீர்த்தனா ஆகிய 9 பேரும் பதவியேற்றனர். சில நாட்களுக்கு முன்னர் அவர்களுக்கான இலாகாகள் ஒதுக்கப்பட்டன.

அமைச்சர்களாக, 1. ஸ்ரீநாத் - தூத்துக்குடி எம்எல்ஏ, 2. எஸ்.கமலி - அவிநாசி, 3. சி. விஜயலக்ஷ்மி - குமாரபாளையம், 4. ஆர்.வி. ரஞ்சித் குமார் - காஞ்சிபுரம், 5. வினோத் - கும்பகோணம், 6. ராஜீவ் - திருவாடானை, 7. பி. ராஜ்குமார் - கடலூர், 8. வி.காந்திராஜ் - அரக்கோணம், 9. மதன்ராஜ்.பி - ஒட்டப்பிடாரம், 10. ஜெகதீஸ்வரி.கே - ராஜபாளையம், 11. ராஜேஷ்குமார்.எஸ் - கிள்ளியூர், 12. விஜய்பாலாஜி.எம் - ஈரோடு கிழக்கு, 13. லோகேஷ் தமிழ்செல்வன்.டி - ராசிபுரம், 14. விஜய் தமிழன் பார்த்திபன்.ஏ - சேலம் தெற்கு, 15. ரமேஷ் - ஸ்ரீரங்கம், 16. பி.விஸ்வநாதன் - மேலூர், 17. குமார்.ஆர் - வேளச்சேரி, 18. தென்னரசு.கே - ஸ்ரீபெரும்புதூர், 19. சம்பத்குமார்.வி - கோவை வடக்கு, 20. முகமது ஃபர்வாஸ்.ஜே - அறந்தாங்கி, 21. டி,சரத்குமார் - தாம்பரம், 22. மரிய வில்சன் - ராதாகிருஷ்ணன் நகர், 23. விக்னேஷ்.கே - கிணத்துக்கடவு ஆகியோர் பதவியேற்றுக் கொண்டனர். இத்துடன் தமிழக அமைச்சரவையில் பலம் 33 ஆக அதிகரித்துள்ளது.

தமிழக அமைச்சரவையில் விசிக, ஐயூஎம்எல் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அது நடைபெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

மேலும், அதிமுகவிலிருந்து பிரிந்து வந்து தவெகவுக்கு ஆதரவு கொடுத்த 25 எம்எல்ஏக்களுக்கு அமைச்சரவையில் இடம் வழங்கினால் ஆதரவை பரிசீலனை செய்வோம் என்று இடதுசாரிகள் எச்சரித்திருந்த நிலையில் அவர்களுக்கு இடம் தரப்படவில்லை.

59 ஆண்டுகளுக்குப் பிறகு: தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் எம்எல்ஏ.க்களான செ. ராஜேஷ்குமார், பெ.விஸ்வநாதன் ஆகியோர் அமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர். தமிழக அரசியலில் 59 ஆண்டுகளுக்குப் பின்னர் காங்கிரஸ் ஆட்சியில் அதிகாரம் பெற்றுள்ளது. இது அந்தக் கட்சிக்கு மிகப்பெரிய திருப்பு முனையாக அமைந்துள்ளது.

இது குறித்து மாணிக்கம் தாகூர் எம்.பி. "தமிழகத்தை தவிர நாங்கள் கூட்டணியில் இருக்கும் மாநிலங்களில் எல்லாம் ஆட்சியில் பங்கு கொள்வோம். ஆனால், இங்கு மட்டுமே மற்றவர்களின் வெற்றிக்காகப் பாடுபட்டுவிட்டு வெளியில் இருப்போம். தமிழக அமைச்சரவை விரிவாக்கம், எங்களுக்கு ஆட்சியில் பங்குகொடுத்துள்ளது. இது தமிழகத்தில் எங்களின் ஆதிக்கத்தை மீட்டெடுக்க உதவும். தமிழக மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கும் வகையில் எங்கள் கட்சியினரும், அமைச்சர்களும் செயல்படுவார்கள்." என்று தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் எம் எல் ஏ ராஜேஷ்குமார் எஸ் பதவியேற்ற போது முன்னாள் முதல்வர் காமராஜ், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை புகழ்ந்து கோஷம் எழுப்பினார். அதற்கு ஆளுநர் இது தங்களது உறுதிமொழியின் பகுதி அல்ல என்று உடனடியாக கண்டனம் தெரிவித்தார்.

தவெக ஆட்சிக்கு வரும் முன்னரே தன்னுடன் கூட்டணி அமைக்கும் கட்சிகளுக்கு ஆட்சியில் பங்கு என்று பிரச்சாரம் செய்தது நினைவு கூரத்தக்கது.

மேலும் தமிழக அமைச்சரவையில் 4 பெண் அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# பெட்ரோல், டீசல், விலை உயர்வை கண்டித்து விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆர்ப்பாட்டம்




சென்னை: பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலையை உயர்த்தியதை கண்டித்து, விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள் சென்னையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. பெட்ரோல், டீசல், சமையல்எரிவாயுவிலை உயர்வை கண்டித்து விசிக மற்றும் இடதுசாரிகள் கட்சிகள் நேற்று வள்ளலார் நகர் பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி மாநில செயலாளர் பழ. ஆசைத்தம்பி, விசிக பொதுச் செயலாளர் ரவிக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

போக்குவரத்து, அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வுக்கு காரணமான பெட்ரோல், டீசல் விலை உயர்வை கைவிட வேண்டும். உணவகங்கள், சிறு தொழில்கள் மூட காரணமான வணிக சிலிண்டர் விலை உயர்வை கைவிட வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்துக்கு பின்னர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம் செய்தியாளர்களிடம் கூறுகையில், "5 நாட்கள் முன் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டது. நான்கு நாட்களுக்கு பிறகு விலை மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே, வணிக சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இதுபோல் சென்று கொண்டிருந்தால் அடுத்த சில நாட்களில் வீட்டு உபயோக சிலிண்டர் விலையும் கடுமையாக உயர்த்தப்படும். வாழ முடியாத நெருக்கடிக்கு மக்களை பாஜக அரசு தள்ளி உள்ளது. பெட்ரோல், டீசல், எரிவாயு என்பது அத்தியாவசியமான பொருள். இதை அனைத்து மக்களுக்கும் குறைவான விலையிலும், தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கவும் பாஜக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் வீரபாண்டியன் தனது உரையில், "பெட்ரோல், டீசல் எரிவாயு விலை உயர்வுக்கு முழுக்க முழுக்க மத்திய அரசும், பிரதமரும்தான் பொறுப்பு. இந்த நெருக்கடிக்கு மூல காரணம் அமெரிக்காவும், இஸ்ரேலும்தான்.

நம் நட்பு நாடு ஈரான் தங்கு தடை இல்லாமல் எரி வாயு கொடுத்து கொண்டிருந்தார்கள். அதன் அதிபரை கொன்று விட்டார்கள். செல்வந்தர்கள் தான் தேசவளங்களை கொள்ளை அடிக்கிறார்கள். பிரதமரின் அறிவுரை வேண்டுகோள் எல்லாம் அந்த பக்கம் திரும்ப வேண்டும். உழைக்கிற மக்கள் பக்கம் அல்ல" என்று கூறினர்.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# "தமிழகத்தில் மின்கட்டணத்தை உயர்த்தும் எண்ணம் இல்லை" அமைச்சர் நிர்மல் குமார் பேட்டி



சென்னை: "தமிழகத்தில் மின்கட்டணத்தை உயர்த்தும் எண்ணம் இல்லை. தவறான தகவல் பரப்பப்பட்டு வருகிறது. மின் வாரியத்தில் ஊழியர் பற்றாக்குறை உள்ளது" என மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "மின்துறையில் சீரமைக்க வேண்டிய பணிகள் நிறைய உள்ளன. சோலார் பேனல் கொள்முதல் விவகாரத்தில் விதிமுறை மீறல் நடந்துள்ளது. தவறு செய்தவர்கள் முன்னாள் அமைச்சர்களாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். மின்தடை குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டாலும் நடவடிக்கை மேற்கொள்ள பணிகள் நடந்து வருகிறது. டிஎன்பிஎஸ்சி பணி நியமனத்தில் எந்தவித முறைகேடும் நடக்காது. மின்சாரத் துறை இரண்டரை லட்சம் கோடி ரூபாய் கடனில் உள்ளது. அதுமட்டுமல்லாமல் ஊழியர்கள் பற்றாக்குறையும் உள்ளது. இதற்கு முன்னர் இந்த யார் துறையை நிர்வகித்தார்கள் எனத் தெரியும். கடந்த ஓராண்டாக, மற்ற ஒப்பந்தப் பணிகளுக்காக தோண்டப்படும் குழிகளில் 160 இடங்களில் பவர் கேபிள்கள் வெட்டப்பட்டுள்ளன.

முதலில் நிர்வாகத்தை சீரமைக்க வேண்டும். டெண்டர் எடுப்பதில் இனி எந்த மறைமுக டீலிங்கும் நடைபெறாது. மின்சார விநியோகத்தை சீராக செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மக்கள் அளிக்கும் புகார்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் மின்கட்டணத்தை உயர்த்தும் எண்ணம் இல்லை. தவறான தகவல் பரப்பப்பட்டு வருகிறது" என்று அவர் தெரிவித்தார்.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# சமூக நலத்துறை மற்றும் மகளிர் மேம்பாடு அமைச்சராக பொறுப்பேற்றுள்ள கே.ஜெகதீஸ்வரிக்கு தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் சார்பில் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்


தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம்
TAMILNADU JOURNALIST WELFARE UNION
No.48, Venkatesa Nagar 1st Street, Virugambakkam, Chennai-600092 9840035480

Date: 21.05.2026

சமூக நலத்துறை மற்றும் மகளிர் மேம்பாடு அமைச்சர் திருமதி.கு.ஜெகதீஸ்வரி அவர்களின்

பணி சிறக்க வாழ்த்துக்கள்

சமூக நலத்துறை மற்றும் மகளிர் மேம்பாடு அமைச்சராக பொறுப்பேற்றுள்ள திருமதி கு.ஜெகதீஸ்வரி அவர்களுக்கு தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் சார்பில் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு சமூக நலத்துறை மற்றும் மகளிர் மேம்பாடு அமைச்சர் கு.ஜெகதீஸ்வரி அவர்கள், தீவிர அரசியலுக்கு வருவதற்கு முன்பாக மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்ட பத்திரிகையாளராக பணியாற்றியவர். எளிமையான அணுகுமுறை, மக்களுடன் நெருக்கமாக பழகும் பண்பு மற்றும் கடின உழைப்பின் மூலம் உயர்ந்துள்ளவர்.

பத்திரிகைத் துறையில் இருந்து அரசியல் பயணத்தை தொடங்கி, மக்கள் பிரச்சனைகள் மற்றும் சமூகத்தின் தேவைகளை ஆழமாக அறிந்தவர் என்ற பெருமைக்குரியவர். தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் ராஜபாளையம் தொகுதியில் போட்டியிட்டு, தீவிரமான மக்கள் தொடர்பு மற்றும் அர்ப்பணிப்பான பிரச்சாரத்தின் மூலம் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

பத்திரிகைத் துறையில் இருந்து அமைச்சரவை பொறுப்பை ஏற்கும் உயரிய நிலையை அடைந்துள்ள திருமதி கு.ஜெகதீஸ்வரி அவர்கள், மக்கள் நலன் சார்ந்த சிறப்பான ஆட்சிப் பணிகளை மேற்கொண்டு தமிழக மக்களின் மனதில் நிலைத்திட வாழ்த்துகிறோம்.

ச.சரவணன்
தலைவர்

மாண்புமிகு சமூக நலத்துறை மற்றும் மகளிர் மேம்பாடு அமைச்சர் கே.ஜெகதீஸ்வரி அவர்கள், தீவிர அரசியலுக்கு வருவதற்கு முன்பாக மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்ட பத்திரிகையாளராக பணியாற்றியவர். எளிமையான அணுகுமுறை, மக்களுடன் நெருக்கமாக பழகும் பண்பு மற்றும் கடின உழைப்பின் மூலம் உயர்ந்துள்ளவர்.

பத்திரிகைத் துறையில் இருந்து அரசியல் பயணத்தை தொடங்கி, மக்கள் பிரச்சனைகள் மற்றும் சமூகத்தின் தேவைகளை ஆழமாக அறிந்தவர் என்ற பெருமைக்குரியவர். தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் ராஜபாளையம் தொகுதியில் போட்டியிட்டு,தீவிரமான மக்கள் தொடர்பு மற்றும் அர்ப்பணிப்பான பிரச்சாரத்தின் மூலம் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். பத்திரிகைத் துறையில் இருந்து அமைச்சரவை பொறுப்பை ஏற்கும் உயரிய நிலையை அடைந்துள்ள திருமதி கே.ஜெகதீஸ்வரி அவர்கள், மக்கள் நலன் சார்ந்த சிறப்பான ஆட்சிப் பணிகளை மேற்கொண்டு தமிழக மக்களின் மனதில் நிலைத்திட வாழ்த்துகிறோம்.

என்றும் தோழமையுடன்.. எஸ்.சரவணன் தலைவர் தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் 9840035480

# தூத்துக்குடியில் ரூ.136.35 கோடி அதிநவீன உயர் சிறப்பு மருத்துவமனைக் கட்டிடத்தை ஸ்ரீநாத் எம்.எல்.ஏ நேரில் ஆய்வு



தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் சுமார் 136.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அதிநவீன உயர் சிறப்பு மருத்துவமனை கட்டிடத்தைத் தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஸ்ரீநாத் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தூத்துக்குடி மற்றும் அதன் சுற்றுவட்டாரத் தென்மாவட்ட ஏழை எளிய பொதுமக்களுக்கு உலகத்தரம் வாய்ந்த உயர்தர மருத்துவச் சிகிச்சைகள் இலவசமாகக் கிடைக்கப் பெற வேண்டும் என்ற நோக்கில், தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் புதிய மல்டி ஸ்பெஷாலிட்டி கட்டிடப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வந்தன. தற்போது சுமார் 136.35 கோடி ரூபாய் பெரும் மதிப்பீட்டில் இந்த அதிநவீன உயர் சிறப்பு மருத்துவமனைக்கட்டிட உள்கட்டமைப்புப் பணிகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இப்புதிய மருத்துவக் கட்டிடத்தில் மருத்துவ உபகரணங்கள் பொருத்தும் பணிகள் மற்றும் மக்கள் பயன்பாட்டிற்குத் திறப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் குறித்துத் தூத்துக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஸ்ரீநாத் நேற்று நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். மேலும் அவர் மருத்துவமனையின் பல்வேறு வார்டுகள், அறுவை சிகிச்சை அரங்குகள் உள்கட்டமைப்பு வசதிகள், குடிநீர் மற்றும் மின்சார விநியோகக் கட்டமைப்பு ஆகியவற்றை அவர் தளம்வாரியாகச்சென்று பார்வையிட்டார். ஆய்வின் போது, மருத்துவக் கல்லூரி டீன், மூத்த மருத்துவர்கள், பொதுப்பணித்துறை அலுவலர்கள் மற்றும் தவெக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



பெரியகுளம் சட்டமன்ற தொகுதி, மனுவில் வார்டு எண் 14 கில் பல பகுதிகளில் சாலை மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்தவும், சாலைகளை சீரமைக்க கூறியும், பல பகுதிகளில் சாலைகள் அமைத்து தரதால் சாலைகளை விரைந்து அமைத்து தருமாறும் பல இடங்களில் பாதாள சாக்கடை மற்றும் மழைநீர் வடிகால் பணிகளை விரைவில் முடிக்க போயும் மற்றும் 15வது வார்டில் ஐந்தாண்டு காலமாக போடாத சாலையை தேர்தல் காலத்தில் அவசரமாக போடப்பட்டு அதை பாதியிலே பல மாதங்களாக நிறுத்தி வைத்திருப்பதால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். இதனால் மழைநீர் வடிகால் சீரமைக்காததால் மழைநீர் பொதுமக்களின் வாசலில் நிற்கும் அவல நிலை ஏற்படுகிறது. இதற்கு முன் கொடுக்கப்பட்ட மனுவினை கருத்தில் கொண்டு சீரமைக்க கோரி கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் தமிழக வெற்றிக் கழகத்தின் பெரியகுளம் நகர் 14வது வார்டு நிர்வாகிகள் சார்பாக பார்த்தசாரதி, ராம்குமார், முகிலன் பனையடியான், ஹரிஷ் குமார், நவீன் பிரகாஷ், ராஜ்குமார், புஷ்பம், லட்சுமி மணி, சிந்தாமணி, வடிவேல், 15வது வார்டு நிர்வாகிகள் சார்பாக பாலசுப்பிரமணி, பால்பாண்டி (பாலா), கிருஷ்ணமூர்த்தி, போதும்மாள், மீனா, ராகுல், வீரம்மாள் மற்றும் 14 15 கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம் மற்றும் கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு துறைச்சார்ந்த பணிகளை மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்



தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன்பிடி துறைமுகத்தின் ஏலக்கூடத்தினை பார்வையிட்டு, விசைப்படகுகளின் தொழிற்முறையினை கேட்டறிந்து, மீன்பிடி துறைமுகத்தில் நடைபெறும் உட்கட்டமைப்பு பணிகளை ஆய்வு செய்தார். பின்னர் மீன்பிடி துறைமுகத்தில் வருகைபுரிந்த மீனவர்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு குடிநீர்வடிகால்வாரியம் சார்பாக தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள 6 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 363 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் ஜல்ஜீவன் மிஷன் நிதியுதவியுடன் ரூ.515.72 கோடி திட்டமதிப்பீட்டில் கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், சேதுராமலிங்கபுரத்தில் செயல்பட்டு வரும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை (16.57 MLD) பார்வையிட்டார்.


மேலும், தாமிரபரணி ஆற்றின் 7வது அணைக்கட்டான மருதூர் அணைக்கட்டினை பார்வையிட்டு, அணையின் நீரியல்விபரம்,நீர்வரத்து, நீர் வெளியேற்றம் மற்றும் கடந்த 2023-ம் ஆண்டு பெருவெள்ளத்தின்போது ஏற்பட்ட பாதிப்பு குறித்து கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், வசவப்பபுரம் பகுதியில் ஆதரவற்ற, கைவிடப்பட்டவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கப்படும் முதியோர் கருணை இல்லத்தினை பார்வையிட்டு, அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார். பின்னர் வல்லநாடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக செயல்பட்டு வரும் விழுதுகள் - வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையத்தினை பார்வையிட்டார்.

மேலும் கருங்குளம் வட்டாரத்தில் அமைந்துள்ள வல்லநாடு துணை வேளாண்மை விரிவாக்க மையத்தை ஆய்வு செய்து, அதில் விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்காக இருப்பு வைக்கப்பட்ட சான்று பெற்ற உளுந்து விதைகள் மற்றும் நுண்ணூட்ட உரங்கள்,உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் இருப்பு போன்றவற்றை ஆய்வு செய்து, அறிவுரைகளை வழங்கினார்.தொடர்ந்து, தோட்டக்கலைத்துறையின் சார்பாக கருங்குளம் வட்டாரம், கீழவல்லநாட்டில் அமைந்துள்ள அரசு தோட்டக்கலை பண்ணையினை நேரில் ஆய்வு செய்து, விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை மூலம் தரமான பழ மரக்கன்றுகள் மற்றும் நாற்றுகள் கிடைக்க தோட்டக்கலைத்துறை மூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களால் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

பின்னர், வல்லநாடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் அடிப்படை வசதிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்து, மருந்துகளின் இருப்பு, மருத்துவபயனாளிகளுக்கு வழங்கப்படும்சிகிச்சைமுறைகள் உள்ளிட்டவை குறித்து மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன்,கேட்டறிந்தார்.

ஆய்வின் போது, தூத்துக்குடி மண்டல மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் இளம்வழுதி, வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ்ணகுமார், செயற்பொறியாளர், நீர்வளத்துறை, கீழ்தாமிரபரணி மற்றும் கோரம்பள்ளம் ஆறு வடிநிலக் கோட்டம் தங்கராஜன்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மனோரஞ்சிதம்,மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பிரம்மநாயகம், உதவி நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மகேஷ் குமார்,தூத்துக்குடி மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் கு.அ.புஷ்ரா ஷப்னம், தோட்டக்கலை உதவிஇயக்குநர்ஜெயந்தன், திருவைகுண்டம் வட்டாட்சியர் தாஹிர் அஹமது மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



மதுரை மாநகராட்சி மண்டலம்–1, வார்டு எண் 16, கோ.புதூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள காய்ச்சல் வார்டு, பதிவு செய்யும் இடம், உள் மற்றும் வெளி நோயாளிகள் பிரிவு உள்ளிட்ட பகுதிகளை பார்வையிட்டு, பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். மேலும், மருத்துவமனையில் குடிநீர் வசதியை மேம்படுத்திட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். சிகிச்சைக்காக வந்திருந்த பொதுமக்களிடம் குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் முறையாக செலுத்தப்பட்டுள்ளனவா என்றும், அவர்களின் பெண் குழந்தைகள் தமிழ்நாடு அரசின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயனாளிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளனரா என்றும் கேட்டறிந்தார்.

# ஈரோட்டில் பினிஷ் ஷீல்டு ராகவேந்திரா ஏஜென்சியின் புதிய அறிமுக விழா வெகுவிமர்சையாக நடைபெற்றது



ஈரோட்டில் கட்டிடங்களில் ஏற்படும் வாட்டர் லீக்கேஜ் (நீர் கசிவு) பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் உலகத்தரம் வாய்ந்த "பினிஷ் ஷீல்டு" நிறுவனத்தின் தயாரிப்புகள் மற்றும் பெயிண்ட்ஸ்,ஹார்டுவேர்ஸ் விற்பனைக்கான புதிய முகவரியாக, ராகவேந்திரா ஏஜென்சியின் அறிமுக விழா ஈரோடு தனியார் மகாலில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்த அறிமுக விழாவிற்கு நிறுவனர் கவியரசு தலைமை தாங்கினார். ஏஜென்சியின் மேலாளர் ஜீவா முன்னிலை வகித்தார். ஈரோடு மாநகராட்சி 40-வது வார்டு மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ரமேஷ் குமார் மற்றும் கருங்கல்பாளையம் பகுதி பொருளாளர் தி.க.முருகேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக வருகை புரிந்து விழாவை முறைப்படி தொடங்கி வைத்தனர். பொதுவாக வீடுகள் மற்றும் கட்டிடங்களில் ஏற்படும் மாடித் தளம், பால்கனி, சமையலறை, பாத்ரூம் மற்றும் சுவர்களில் ஏற்படும் விரிசல்கள், நீர் கசிவு,பூஞ்சைகாளான் போன்ற பிரச்சினைகளால் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். இவற்றுக்குத் தீர்வு காணும் வகையில், மிகக் குறைந்த செலவில், தரம் வாய்ந்த பினிஷ் ஷீல்டு நிறுவனத்தின் அதிநவீன நீர் கசிவு தடுப்புத் தொழில்நுட்பவாட்டர்ப்ரூஃபிங் தயாரிப்புகள் மற்றும் கட்டுமானப் பொருட்கள் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதில்பழையடைல்ஸ் அல்லது பாத்ரூம்களை உடைக்காமலேயே அதன் மேல் டைல்ஸ்ஒட்டி நீர் கசிவைத் தடுக்கும் நவீன தொழில்நுட்பம், மொட்டை மாடி மற்றும்சுவர்களில்உள்ள சிறிய இரும்பு கம்பிகள் துருப்பிடிக்காமல் தடுத்து நீண்ட ஆயுள் வழங்குதல், புதிய வீடுகள் கட்டும்போதே பல ஆண்டுகள் நீடித்து உழைக்கும் தன்மையுடன் கூடிய வாட்டர் ப்ரூஃபிங் ஆலோசனைகள் மற்றும் சேவைகள் போன்ற பல்வேறு சிறப்பம்சங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் வாடிக்கையாளர்களின் கட்டிடப் பிரச்சினைகளுக்குத் தகுந்த தீர்வுகளை வழங்க இலவச ஆலோசனைகளும் இங்கு வழங்கப்படுகின்றன என்று விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இந்த விழாவில் கலைத்தாய் அறக்கட்டளை சிலம்பம் மாது, ஈரோடு கிழக்கு மடிகார் சங்க தலைவர் தனக்கோடி, திமுக பிரமுகர்கள் இமயம் சிவக்குமார், கேபிள் செந்தில் குமார், அஷ்ரப் செல்வகுமார் மற்றும் பொறியாளர்கள், பெயிண்டர்கள் என 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# முன்னாள் பாரதப் பிரதமர் பாரத ரத்னா ராஜீவ் காந்தியின் 35ம் ஆண்டு நினைவு தினம்

## ஈரோட்டில் காங்கிரசார் உணர்வுபூர்வ அஞ்சலி, பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி ஏற்றனர்



முன்னாள் பாரதப் பிரதமர் பாரத ரத்னா ராஜீவ் காந்தி அவர்களின் 35-வது நினைவு தினத்தை முன்னிட்டு, ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் ஈ.வி.கே சம்பத் சாலையில் இன்று அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்டிருந்த அமரர் ராஜீவ் காந்தியின் திருவுருவப்படத்திற்கு, மண்டல தலைவர்களான மாமரத்துபாளையம் எஸ்.கோபி, ஆர். விஜயபாஸ்கர், கே.புனிதன் ஆகியோர் முன்னிலையில், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா. ராஜேஷ் ராஜப்பா தலைமை தாங்கி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் முன்னாள் தலைவர் டி. திருசெல்வம் பயங்கரவாத எதிர்ப்பு நாள் உறுதிமொழியை வாசிக்க, கூடியிருந்த அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.

இந்த நிகழ்ச்சியில்

முன்னாள் மாவட்ட தலைவர்கள் ஈ.ஆர். ராஜேந்திரன், ஈ.பி.ரவி.

மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.மாரியப்பன், எம்.ஞானதீபம்.

மாவட்டத் துணைத் தலைவர் கே.எஸ்.செல்வம்.

பொதுச் செயலாளர்கள் டி.கண்ணப்பன், வி. கே.சச்சிதானந்தம், இரா. கனகராஜன், கராத்தே யூசுப்.தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ்(TCTU) மாநில துணைத்தலைவர் குளம் எம். ராஜேந்திரன்.

தமிழ்நாடு வழக்கறிஞர் பிரிவு மாநில செயலாளர் சி.எம்.ராஜேந்திரன். ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடக பிரிவு தலைவர் ம.முகமது அர்சத். ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத்தலைவர் கே.என்.பாஷா.

முன்னாள் மாமன்ற உறுப்பினர் கை சுப்ரமணியம்.

ஈரோடு மாவட்ட வழக்கறிஞர் பிரிவு தலைவர் ஈ.ஆர்.எஸ்.பிரகாஷ்.

முன்னாள் மண்டல தலைவர் அல்டிமேட் தினேஷ்.

நெசவாளர் அணி மண்டல தலைவர் எம். வி.விஜயராகவ்.

ஈரோடு மாநகர் மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி அன்னபூரணி.

வெள்ளோடு ஆர்.பரமசிவம்.

சேவா தளம் மாவட்ட துணை தலைவர் ராஜாஜிபுரம் பி.குமரேசன்.

மாவட்ட நிர்வாகிகளான நடராஜ் செட்டியார், வேன் ராமசாமி, ஆலமரத்து தெரு உமர் பாய், சிந்தன் நகர் எம். கிருஷ்ணமூர்த்தி, எம்.ஆர்.மாது, முனியப்பன், செல்வம் என்கிற குப்புராஜ், ஆர்.என்.புதூர் பெருமாள், வி.ஆர். சுரேஷ்குமார், ஆர்.ரவிச்சந்திரன், வாட்டர்சிவாஜி, ஆர்.குமார், நரிப்பள்ளம் ரவிச்சந்திரன் மற்றும் பலர் திரளாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை காங்கிரஸ் கட்சி சார்பில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது மாவட்டத் தலைவர் இதயத்துல்லா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்டோர் அதிமுகவிலிருந்து விலகி காங்கிரஸ் கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டனர் காங்கிரஸ் கட்சியின் இணைந்த அனைவருக்கும் மாவட்ட தலைவர் பொன்னாடை போற்றி வரவேற்றனர் தொடர்ந்து நாராயணன் தியேட்டரில் இருந்து ராஜீவ் காந்தி திருவிழா படத்துடன் பேரணையாக சென்று பேருந்து நிலையத்தில் உள்ள அவரது சிலைக்கு மலர்கள்தூவி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர் தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட காங்கிரஸ் கட்சியினர் கலந்துகொண்டு ராஜீவ் காந்தியின் புகழை பாடி கோஷமிட்டனர்.



திராவிட முன்னேற்றக் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கு இணங்க நடந்து முடிந்த 2026 சட்டமன்ற தேர்தலின் வெற்றி வாய்ப்பை தவற விட்டதை ஆலோசனை செய்ய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட சி.பி.எம்.எழிலரசன் ( EX MLA திமுக கழக கொள்கை பரப்பு செயலாளர்) மற்றும் மாநில மாணவர் அணி துணை செயலாளர் மன்னை சோழராஜன் ஆகியோர் ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிழக்கு தொகுதியில் ஆய்வு கூட்டத்தினை நடத்தி மனுக்களை பெற்று கொண்டு தனித்தனியாக கருத்துக்களை கேட்டறிந்தனர். இக்கூட்டத்தில் ஈரோடு தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் சு. முத்துசாமி மற்றும் திராவிட முன்னேற்றக் கழக மாநில, மாவட்ட, மாநகர, பகுதி கழக வட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



ஈரோடு மாவட்டம் சித்தோட்டில் செயல்பட்டு வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஈரோடு மேற்கு தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் ஆனந்த் மோகன் திடீர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது கழிப்பறை வசதி, மருத்துவ வசதி குறை நிறைகளை மருத்துவ பணியாளர்கள் மற்றும் பயனாளிகளிடம் கேட்டறிந்தார். மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் ஆய்வினை மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம் சிவகிரி அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், 13 ஆண்டுகளுக்குப் பிறகு மாணவர்கள் நூறு சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். எனவே சிவகிரி பேரூராட்சி தலைவர் பிரதீபா கோபிநாத் இந்த மாபெரும் வெற்றியை சாத்தியப்படுத்திய பள்ளியின் ஆசிரியர் பெருமக்கள் மற்றும் மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

# டெண்டர் முறைகேடு புகார்: மின்வாரிய உயரதிகாரிகள் 2 பேர் பணியிடை நீக்கம்




சென்னை: தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகத்தின் டெண்டர் விடுவதில் முறைகேடு கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் மின்வாரிய உயரதிகாரிகள் 2பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஒப்பந்தங்கள் அனைத்தும் சிண்டிகேட் அமைக்கப்பட்டு அதன் மூலம் தேர்வானவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதாக புகார் இருந்து வந்தது. இந்த நிலையில், டிரான்ஸ்பார்மர் ஊழல் குற்றச்சாட்டில் வழக்குப்பதிவு செய்யவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஒப்பந்தங்கள் அனைத்தும் வெளிப்படைத்தன்மை இல்லாமல் குறிப்பிட்ட நபர்களுக்கு அதிக தொகைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு மின்சார வாரியத்திற்கு நஷ்டம் ஏற்படுவதாகவும் மின்சார வாரிய ஊழியர்கள் குற்றம்சாட்டி வந்தனர்.


இந்த சூழலில், தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் தலைமையில் புதிய அரசு அமைந்துள்ளது. புதிய அரசில் சட்டம் மற்றும் மின்சாரத்துறை அமைச்சராக சி.டி.ஆர். நிர்மல்குமார் பதவியேற்றுக் கொண்டார். இதையடுத்து, முறைகேடாக அனுமதிக்கப்பட்டதாக புகாருக்கு உள்ளான டெண்டர்கள் தொடர்ந்து ரத்து செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இதுதொடர்பாக தமிழ்நாடு மின்சார வாரியம் இன்று அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், 'மின்சாரத் துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார், தமிழ்நாடு மின்வாரிய தலைமை அலுவலகத்தில் பல்வேறு ஆய்வு கூட்டங்களை நடத்தி வருகிறார். இந்த ஆய்வின்போது தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகத்தின் சமீபத்திய ஒதுக்கீடு மற்றும் ஒப்புதல் வழங்கியதில் வெளிப்படைத்தன்மை இல்லாமல், அவசர கதியில் ஒப்புதல்கள் வழங்கப்பட்டுள்ளது தெரிய வந்தது.

இந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் முறையான விசாரணை நடப்பதற்கும், நிர்வாகரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும், முறையற்ற நிர்வாக தலையீடு மற்றும் இதர குற்றச்சாட்டுகள் காரணமாக தலைமை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் (வருவாய்) வி.காசி, தலைமைப் பொறியாளர் (மரபுசாரா எரிசக்தி) பி.சந்திரசேகரன் ஆகியோர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மேற்கூறிய குற்றச்சாட்டுகளில் தொடர்புடைய பசுமை எரிசக்தி கழகத்தின் ஓய்வுபெற்ற இயக்குநர் (தொழில்நுட்பம்) எஸ். மங்களநாதனின் ஓய்வூதிய பலன்கள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சம்பந்தபட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான முறையான விசாரணை நடைபெற்று மின்வாரிய விதிமுறைகளின்படி மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆன்லைன் மருந்து விற்பனையை தடுக்க கோரி தமிழகம் முழுவதும் 45 ஆயிரம் மருந்தகம் மூடல்



சென்னை: ஆன்லைன் மருந்து விற்பனையை தடுக்க கோரி தமிழகம் முழுவதும் 45 ஆயிரம் மருந்து கடைகள் மூடப்பட்டன. ஆன்லைன் மருந்து விற்பனைக்கு தடை விதிக்க கோரி நாடு முழுவதும் மருந்து வணிகர்கள் நேற்று வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடு முழுவதும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை 12.5 லட்சம் மருந்தகங்களும், தமிழகத்தில் மட்டும் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்தகங்கள் கடையடைப்பு செய்யப்பட்டன.

மருத்துவமனைகளுடன் இணைந்த மருந்தகங்கள், அப்போலோ, மெட்பிளஸ், துளசி பார்மசி, முத்து பார்மசி போன்ற சங்கிலி தொடர் மருந்தகங்கள், முதல்வர் மருந்தகம், தமிழ் நாடு கூட்டுறவு சங்க மருந்தகங்கள், பிரதம மந்திரி ஜன் ஔஷதி கேந்திரா போன்ற அரசு ஆதரவு சில்லறை விற்பனை நிலையங்கள் என சுமார் 5 ஆயிரம் மருந்தகங்கள் கடையடைப்பில் பங்கேற்கவில்லை.

அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க, மருந்துகள் கட்டுப்பாட்டுத் துறையால் மாவட்ட வாரியாக உதவி எண்கள், தமிழ்நாடு மருந்து வணிகர் சங்கமும் மாவட்ட வாரியாக உதவி எண்களை அறிவித்திருந்தன.

இதன் மூலம் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான மருந்துகளை கேட்டு பெற்றனர். ஆனாலும், வழக்கமாக பயன்படுத்தும் நிறுவனங்களின் மாத்திரை, மருந்துகள் கிடைக்காததால் பலர் அவதிக்குள்ளாகினர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினரான எம். விஜய் பாலாஜி புதிய அமைச்சராக நியமிக்கப்பட்டு உள்ளார். இவருக்கு 'கைத்தறி, துணிநூல் மற்றும் கதர் துறை' ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர் கைத்தறி, துணிநூல் மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியம் ஆகிய முக்கியப் பொறுப்புகளைக் கவனிப்பார். ஜவுளி நகரான ஈரோட்டைச்சேர்ந்தவருக்குஇத்துறைவழங்கப்பட்டுள்ளது கட்சிநிர்வாகிகள்இடையேமகிழ்ச்சியைஏற்படுத்தியுள்ளது.



ஈரோடு மாநகர் கோட்டை பகுதியில் அமைந்துள்ள மிகவும் பிரபலமான பிரசித்தி பெற்ற அருள்மிகு ஆருத்ரா கபாலீஸ்வரர் திருக்கோயிலில் வைகாசி விசாக தேர் திருவிழா நேற்று (21/5/2026) கொடியேற்றத்துடன் துவங்கியது . இந்நிகழ்வில் அறங்காவலர் தலைவர் கர்சிப் சுப்பிரமணியம் அறங்காவலர் சுந்தர்ராஜ், 2ம் மண்டல காங்கிரஸ் கமிட்டி தலைவரும்,முன்னாள் மாமன்ற உறுப்பினருமான கோட்டை விஜயபாஸ்கர் , அறங்காவலர்கள் ராணி குமரேசன், ராவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சரக்கு கட்டணங்கள் 4% உயர்வு டீசல் விலை உயர்வால் முடிவு



புதுடெல்லி: டீசல் விலை உயர்வு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மே 20 முதல் அமலுக்கு வரும் வகையில் சரக்குக் கட்டணங்களை உயர்த்த போக்குவரத்துத் துறை சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர். இந்த நடவடிக்கையால் விலைவாசிமேலும்உயரும் என நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த சரக்கு கட்டண உயர்வு அகில இந்திய போக்குவரத்துத் துறையினர் நலச் சங்கம் (AIT-WA) சார்பில் வியாழக்கிழமையன்று (மே 21) அறிவிக்கப்பட்டன. 'இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளாக டீசல் விலை நிலையாகவே இருந்து வந்தன. இதனால்சரக்குக்கட்டணங்களை பெரிய அளவில் உயர்த்தவில்லை. தற்போது அமலுக்கு வந்த டீசல் விலையின் கடும் உயர்வு காரணமாக கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளது' என அந்த சங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டீசல் விலை உயர்வைச் சமாளிக்கும் வகையில், போக்குவரத்துத் துறையினர் 'எரிபொருள் சரிசெய்தல் காரணி'(FAF) எனப்படும் ஒரு புதிய கணக்கீட்டு முறையை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

போக்குவரத்து துறையின் செலவுகளில் 65% பங்கினை டீசலின் விலை நிர்ணயிக்கிறது. எனவே டீசல் விலைக்கான செலவை ஈடுகட்டும் வகையில், சரக்கு கட்டணங்களைஉயர்த்தஇந்த கணக்கீட்டு முறை உதவும் என போக்குவரத்து துறையினர் தெரிவிக்கின்றனர். போக்குவரத்துத் துறையினர் தங்கள் வங்கிக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு உதவும் வகையில், இந்த புதிய வழிமுறையை ஏற்றுக்கொண்டு கூடுதல் கட்டணத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வாடிக்கையாளர்களுக்கு அகில இந்திய போக்குவரத்துத் துறையினர் நலச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதேபோல,பல இடங்களில் டீசல் பற்றாக்குறையால் லாரிகள் ஆங்காங்கே சிக்கிக்கொள்வதால், சரக்குகள் வந்து சேர்வதில் ஏற்படும் தாமதத்துக்கு எவ்வித அபராதமும் விதிக்கவேண்டாம்என்றும் போக்குவரத்து துறையினர் வாடிக்கையாளர்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

சரக்கு கட்டணம் 4% உயர்த்தப்படுவதால், நாடு முழுவதும் பல்வேறு பொருட்களின் விலைவாசி உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே பெட்ரோல், டீசல் மற்றும் சிலிண்டர் விலைஉயர்வால்பாதிக்கப்பட்டுள்ள மக்கள், சரக்கு கட்டண உயர்வால் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வையும் எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

## இந்திய பொருளாதார வளர்ச்சியை 6.4% ஆக குறைத்தது ஐ.நா.





புதுடெல்லி: மேற்கு ஆசிய போர் பதற்றத்தால் ஏற் பட்டுள்ள பொருளாதாரப் பாதிப்புகளைக் சுட்டிக்காட்டி, இந்தியாவின் 2026-ம் ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி (ஜிடி பி) மதிப்பீட்டை ஐக்கிய நாடுகள் சபை(ஐ.நா.) 6.4 சதவீதமாகக் குறைத்துள்ளது. முந்தைய கணிப்பில் இது 6.6 சதவீதமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், உலகளவில் மிக வேகமாக வளர்ந்து வரும் முக்கியப் பொருளாதார நாடுகளின் வரிசையில் இந்தியா தொடர்ந்து முன்னிலையில் நீடிப்பதாக ஐ.நா.வின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேற்கு ஆசிய நெருக்கடியானது உலகப்பொருளாதாரத்துக்கு மேலும் ஒரு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அந்த அறிக்கை, இதன் காரணமாக உலகளாவிய பொருளாதார வளர்ச்சி மந்தமடைந்துள்ளதாகவும், பணவீக்க அழுத்தம் மீண்டும் அதிகரித்துள்ளதாகவும் விவரித்துள்ளது.

இது குறித்து ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறையின் உலகளாவிய பொருளாதாரக் கண்காணிப்புப் பிரிவின் மூத்த பொருளாதார நிபுணர் இங்கோ பிட்டர்லே செய்தியாளர்களிடம் கூறும்போது, "2025-ம் ஆண்டில் 7.5 சதவீதமாக இருந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி, 2026-ல் 6.4 சதவீதமாகக் குறையும் என கணிக்கப்பட்டுள்ளது. அதிக எரிசக்தி இறக்குமதிச் செலவுகள் மற்றும் உலகளாவிய நிதி நெருக்கடியின் தாக்கத்தை பிரதிபலிப்பதாகவே இது அமைந்துள்ளது" என்றார்.

# தமிழகத்தில் 2 நாட்களுக்கு வெப்ப அலை வீசும் வானிலை மையம் எச்சரிக்கை




தமிழகத்தின் சில பகுதிகளில் இன்றும், நாளையும் வெப்ப அலை வீச கூடும் என்று வானிலை மையம் எச்சரித்து உள்ளது. அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் உச்சம் பெற்றிருக்க கூடிய சூழலில் தலைநகர் சென்னையில் சுமார் 108 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் சுட்டெரிக்கும் என்று வானிலை மையம் எச்சரிக்கை விடுதுள்ளது. நேற்றைய தினம் மீனம்பாக்கம் விமான நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் 107 டிகிரி அளவிற்கு வியில் பதிவாகி இருந்தது கடல் காற்றும் தரையை நோக்கி தாமதமாக வந்ததே சென்னையில் வெயில் அதிகரிக்க காரணம் என்று கூறப்படுகிறது. இதுகுறித்து தகவல் தெரிவித்திருக்கும் வானிலை ஆய்வு மையம், கடல் காற்று தரைக்கு வரும் நேரம் காலதாமதமாக இருப்பதால் தமிழ்நாட்டில் அதிகபத வெப்பநிலை இயல்பான அளவை விட சுமார் 3 முதல் 4 டிகிரி செல்ஸியஸ் அதிகரிக்க கூடும் என்று கூறி உள்ளது. இன்றும், நாளையும் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் என ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக் கூடும் எனவும் எச்சரித்து உள்ளது. கத்திரி வெயில் காலத்தில் 104 டிகிரி அல்லது 105 டிகிரி வரை வெப்பம் பதிவாகும். ஆனால் தற்போது இந்த அளவு 107 டிகிரி, 108 டிகிரி என்று அதிகரித்து கொண்டே செல்வது மக்களுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தம் என்கிறார்கள் நிபுணர்கள். தமிழகத்தில் 5 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.இது தொடர்பான அறிக்கை யில் கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று கூறியுள்ளது.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம் ஈஞ்சம்பள்ளி கிராமம் கீரமடையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பொருள் தந்த குல ஸ்ரீ வேலாத்தாள் சாமிக்கு பொங்கல் பண்டிகை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் தீர்த்த குடம் எடுத்து வந்து சிறப்பு அபிஷேகமும் மறுநாள் பொங்கல் மற்றும் மாவிளக்கு விசேஷ அபிஷேக பூஜைகளும் அலங்கார ஆராதனைகளும் நடைபெற்றது மாலை வள்ளி கும்மியாட்டம் சிறப்பாக நடைபெற்றது.

# மும்மொழி கொள்கையை அனுமதித்தால் மீண்டும் ஒரு மொழிப்போர் உருவாகும்

## மதிமுக பொதுச்செயலாளர் வைகோ எச்சரிக்கை



சென்னை: மத்திய அரசுஅழுத்தம்கொடுத்தாலும் மும்மொழி கொள்கையை அனுமதிக்க கூடாது. அப்படி செய்தால் மீண்டும் ஒரு மொழிப்போர் உருவாகும் என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ எச்சரித்துள்ளார்.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தலைமையில் மதுரை அழகர் கோயில் சாலையில் உள்ள தமிழ்நாடு உணவகத்தில் மதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் (மே 21) நடைபெற்றது.

முன்னதாகசெய்தியாளர்களை சந்தித்த வைகோ,"பிஎம் ஸ்ரீ திட்டத்தை மத்திய அரசு திணிக்க முயற்சிக்கிறது. அதனை தமிழக அரசு தடுக்க வேண்டும். முதலமைச்சர் விஜய், தமிழுக்காக உயிரிழந்தவர்கள், சிறைவாசம் அனுபவித்தவர்களின் தியாகத்தை மனதில் வைக்க வேண்டும். மத்திய அரசு அழுத்தம் கொடுத்தாலும் மும்மொழி கொள்கையை அனுமதிக்க கூடாது. அப்படி செய்தால் மீண்டும் ஒரு மொழிப்போர் உருவாகும்.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில்காட்டுப் பன்றிகளின் தொல்லை அதிகமாக உள்ளது. அவற்றை காட்டு விலங்குகள் பட்டியலில் இருந்து அகற்ற வேண்டும். மேலும், காட்டுப் பன்றிகளை கட்டுப்படுத்த வேலிகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

ஸ்டெர்லைட் ஆலை விவகாரத்தைநீதிமன்றம் வாயிலாக நாங்கள் தான் தடுத்து நிறுத்தினோம்.


அனில்அகர்வால்,பிரதமருக்கு நெருக்கமானவர். வேறு வடிவில் காப்பர் என்ற பெயரில் மீண்டும் ஸ்டெர்லைட் வந்தால் அனைவரையும் ஒன்று திரட்டி போராடுவோம். நெய்வேலி நிலக்கரி சுரங்கத்தை தனியாருக்கு கொடுக்க விடாமல் தடுத்தது நான் தான். கருவேல மரங்களை நீக்கும் பணிகளில் நாங்கள் ஈடுபட உள்ளோம்.

ஆளுநர் நிகழ்ச்சிகளில் வந்தே மாதரத்தை திணிக்கிறார்கள். தமிழக அரசு நிகழ்ச்சிகளில் வந்தே மாதரம் பாடலை திணிக்க கூடாது என அரசை வலியுறுத்துகிறேன். இந்த ஆட்சி கூட்டணி ஆட்சியாக உள்ளது. கூட்டாட்சி தத்துவத்துக்கு இடையூறு ஏற்படாமல், மாநில சுயாட்சியை பெறும் வகையில் அரசு இருக்க வேண்டும்.

திருமாவளவனின் கருத்துக்கு நான் விளக்கம் தர இயலாது. நான் அவர்களின் கருத்துக்கு விளக்க உரை எழுதுபவன் அல்ல. தவெக-வின் வெற்றி, வரலாற்றில் இருக்கும். மதிமுக வாக்குவாங்கிஅப்படியே உள்ளது. தமிழகத்தின் நன்மைக்காக மதிமுக தொடர்ந்து செயல்படுகிறது. 17 நாட்களில் தவெக பல நல்ல காரியங்களை செய்துள்ளது.

திமுக அதன் நிலைப்பாட்டில் சரியாக உள்ளது. காங்கிரஸ் இருக்கும் இடம் தான் மதச்சார்பின்மை இருப்பதாககூறுவது சரியல்ல. திமுக-அதிமுக கூட்டணி பேச்சுவார்த்தை பற்றி எனக்கு தெரியாது. வாஜ்பாய் மத்திய அமைச்சர் பதவி கொடுக்கிறேன் என்ற போதே வேண்டாம் என சொன்னவன் நான். என்றைக்கும் அமைச்சர் பதவிக்கு ஆசைப்பட மாட்டேன்" என்றார்.

# Canada Cricket chief Arwinder Khosa's house fired on in extortion bid:



*Shots were fired at the home of Cricket Canada's chief in Surrey, linked to an extortion attempt, as police investigate ongoing allegations of corruption.*

*The house of the chief of Canada's troubled cricket association was fired upon on in the early hours of Wednesday in connection with an extortion attempt, police said.*

*In a statement, Surrey Police Service (SPS) said the incident occurred at 4.40 am. The home was located in the Newton locality of Surrey, in British Columbia. SPS said that upon arrival, officers noted damage to the residence and evidence of shots fired. The residence was occupied at the time of the shooting and but there were no injuries.*

*"The investigation is in its early stages; however, it is believed to be extortion related," SPS said in a release.*

*SPS's Extortion Response Team (ExRT) assumed the lead in the ongoing investigation, and the Integrated Forensic Identification Services (IFIS) was processing physical and digital evidence.*

*The outlet CBC News reported that Cricket Canada president Arwinder Khosa confirmed over phone that the house was his but added no details.*

*Khosa recently took over Cricket Canada and the body has been beset with controversies. A CBC News report in April said that gang-related threats to Canadian cricket team players were being investigated by law enforcement, amid a web of allegations against the sport's governing body, ranging from corruption to match-fixing.*

*A months-long investigation by CBC News raised questions about the role of Cricket Canada's former and current management and potential match-fixing linked to the Lawrence Bishnoi gang.*

*It said that police in the town of Delta in British Columbia confirmed it was probing allegations "of interference and threats related to cricket at both the provincial and national levels" and due to "broader integrity considerations that extend beyond local jurisdiction", the matter had been flagged to the Royal Canadian Mounted Police (RCMP).*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.